மாவட்ட ஆட்சித் தலைவர், சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினிடத்திலே பேசி நல்ல முடிவுகளை இந்த அரசு மேற்கொள்ளும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 227, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

227--

நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்துதல்

23405–திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக பல சீர்த்திருத்தங்கள் செய்து, தமிழகம் முன்னேறுவதற்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் கேட்ட கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். மேலும் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் மூதுரைக்கு ஏற்ப பன்னெடுங் காலமாக பெருமளவில் கடல் வணிகம் நடந்து வந்த நாகப்பட்டினம் துறைமுகத்தை ஒட்டியுள்ள பனங்குடியில், அந்த கிராமத்தில் எம்.ஆர்.எல். என்ற சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் காவிரிப் படுகையில் கிடைக்கும் எண்ணையை சுத்திகரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கும்போது, கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலம் இந்த ஆலையை விரிவுபடுத்தமுடியும் என்பதாலும் மேலும் வெளிநாடுகளில் சரக்கு போக்குவரத்துகளை நடத்துவதற்கு வசதியாக இருக்கவேண்டும் என்பதாலும் நாகப்பட்டினம் துறைமுகத்தை வெளிநாட்டில் இருப்பது போல்-ஏனென்றால் நாகப்பட்டினம்

துறைமுகம் இயற்கைச் சீற்றத்தால், அதன்விளைவாக அடிக்கடி கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அந்த துறைமுகத்தை வெளிநாட்டில் இருப்பதைப் போல அதி நவீன முறையில் மேம்படுத்தியும் மேலும் நாகப்பட்டினத்திலிருந்து பயணிகள் கப்பல் விடுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்காக ஒரு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்ததற்குப் பிறகு மத்திய அரசுக்கு மாநில அரசு - மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிந்துரை செய்து அனுப்புவார்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை ஒட்டியே நான் கேட்கிறேன். மாமல்லபுரம், கடலூர், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் துறைமுகவசதி இல்லாததால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக மாமல்லபுரம் வழியாக சென்னை முதல் இராமேஸ்வரம் வரை கப்பல் போக்குவரத்தை நடத்தமுடியாமல் இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தாராளமாக உதவ முன்வருகிறார்கள். மேலும் கேரளாவில் திருவனந்தபுரத்தில் உள்ள விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக நவீனப்படுத்த வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியர்கள் பெருமளவில் நிதியுதவி புரிந்து இருக்கிறார்கள். அதேபோன்று தமிழ்நாட்டில் மேற்கண்ட இடங்களில் துறைமுகங்கள் அமைக்க உதவி செய்ய ஆர்வமுடன் இருக்கின்றார்கள். எனவே மாமல்லபுரம், கடலூர், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் துறைமுக வசதியை ஏற்படுத்தித் தர அரசு ஆவனசெய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, நாகப்பட்டினத்தைப் பற்றியது. தமிழ்நாடு கடலோரப் பகுதிகள் பூராவையும் சேர்த்தீர்கள் என்றால் அமைச்சரிடத்தில் இப்போது குறிப்பு இருக்காது.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரைப் பற்றி நேற்றையதினமே நான் சொல்லி இருக்கிறேன். நாகப்பட்டினம் குறித்து நடவடிக்கை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது போன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் சொன்னது போன்று, நம்முடைய இந்தியத் திருநாட்டிலேயே 1000 கிலோமீட்டர் இருக்கின்ற கடலோரப் பகுதியாக இருப்பது தமிழகம். ஆக எங்கு பார்த்தாலும்

இங்கே துறைமுகம் உருவாக்கவேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கும். ஆனால் எந்தெந்த இடத்தில் சாத்தியக் கூறுகள் இருக்கிறதோ, அதை ஆய்வு செய்து மத்திய அரசுக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்த பரிந்துரையின் அடிப்டையில் கடலூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் துறைமுகங்களை விரிவுபடுத்துவதற்காக அரசு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கோபால்

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் துறைமுகம் மிகப் பழமைவாய்ந்த ஒரு துறைமுகம் ஆகும். இப்போது மாதத்திற்கு எப்போதாவது ஒரு முறைதான் சரக்கு கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்தை கூட நவீனப்படுத்துவதற்காக, மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். அந்தப் பணி எப்போது துவங்கப்படும் அப்படி துவங்குகின்ற வேளையில் இங்கே இருந்து பயணிகள் அந்தமான்-நிக்கோபார் போன்ற பகுதிகளுக்கும், கல்கத்தா, சிங்கப்பூர் போன்ற பகுதிகளுக்குப் பயணிகள் கப்பலிலே செல்வதற்கும் வேண்டிய வசதியை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குள்ளே கப்பல் விடவேண்டும் என்று சொல்வது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடலோரப்பகுதிகளில் உள்ள துறைமுகத்தை விரிவாக்கும் எண்ணத்தின் அடிப்படையிலே இந்த வினா எழுந்திருக்கிறது. அதைப் போன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே குளச்சல் என்ற இடத்திலே நல்ல மீன்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலசுப்பிரமணியன், நான் மரியம் உல் ஆசியா கேட்டதற்கே சொன்னேன். நீங்கள் கடலோரம் பூராவும் போய்க் கொண்டேயிருந்தால் அது போய்க் கொண்டே இருக்கும்.